O.S.No.73/2015

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:22.09.2025

D.W.4: முனியம்மாள் க/பெ– சுப்பாராஜ்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் படிக்கவில்லை. எனக்கு 3 மக்கள், அவர்களுக்கு திருமணமாகி விட்டது. நான் தற்போது தனியாக சூலக்கரையில் வசித்து வருகிறேன். நான் பட்டன் செல்போன் பயன்படுத்தி வருகிறேன். எனக்கு ஆண்ட்ராய்டு போன் பயன்படுத்த தெரியாது. செல்போனில் வரும் அழைப்புகளை எனக்கு பதிவு செய்ய தெரியாது. வாதி வரதராஜன் எனது குடும்பத்திற்கு ஏற்கனவே பழக்கப்பட்டவர் என்றால் எனது கணவருக்கு பழக்கப்பட்டவர் ஆவார். வாதி தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் வெறும் பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன், அதில் எதுவும் எழுதவில்லை. கடனுறுதி சீட்டில் சம்மதித்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் என்னை மிரட்டி கையெழுத்து வாங்கினார்.

2) கடனுறுதி சீட்டில் மிரட்டி கையெழுத்து வாங்கியதாக கூறுவது குறித்து உடனடியாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன்.நான் வாதியிடம் கடன் பெற்றது உண்மை என்றும், மேற்படி கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை மனப்பூர்வமாக வாதிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றும், பணத்தை திருப்பி செலுத்தாததால் வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு சட்ட ஆலோசனை பெற்று பணத்தை திருப்பி செலுத்தாமல் இருக்க பொய்யான காரணங்களை கூறி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல.

3) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 குறுந்தகடில் உள்ள உரையாடல்கள் எந்த செல்போனில் இருந்து பதிவேற்றம் செய்யப்பட்டது என்பது குறித்து சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 குறுந்தகடு பதிவேற்றம் செய்ததற்கான சான்றிதழ் உரிய மற்றும் தகுதியான நபரால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் வாதி வழக்கு சம்மந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளதக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.